SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

MARCH - 2020

# TNPSC ZERO CURRENT AFFAIRS PRELIMS

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# MARCH – 2020

## *தமிழ்நாடு*

1) **Cobuddy** செயலி : Covid-19ஆல் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்களுக்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையே ஒரு தொடர்பினை உருவாக்குவதற்காக திருவள்ளூர் காவல்துறை இச்செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

2) **Chalo செயலி** : சென்னையில் உள்ள பேருந்து பயணிகள் இப்போது chalo செயலியை பயன்படுத்தி அரசுப் பேருந்துகளின் நிலையை கண்காணிக்க முடியும்.

3) **Covid-19** பரவுவதை தடுக்க 2020 மார்ச் 24ஆம் தேதி மாலை 6 மணி முதல் மார்ச்-31ம் தேதி வரை மாநிலத்தில் முழு ஊரடங்கு உத்தரவை தமிழக அரசு அறிவித்துள்ளது.

4) 2020ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதி **மயிலாடுதுறையை புதிய 38ஆவது மாவட்டமாக** முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

5) ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவின் நேமிலி மற்றும் மன்னூர் கிராமங்களில் **ஒரு தகவல் மைய பூங்காவை** உருவாக்குவதாக முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

6) பெருநகர சென்னை மாநகராட்சி நகரத்திற்குள் வைரஸ் பரவாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக பெரிய கட்டுப்பாட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

7) கொரோனா வைரஸ் நோய் மாநிலத்தில் பரவுவதைக் கண்டறிய 19 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவை அரசு அமைத்துள்ளது.

8) **தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகங்கை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடுமணல்** ஆகிய தொல்பொருள் ஆராய்ச்சி தளங்களில் அகழ்வாராய்ச்சி பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று தமிழ் கலாச்சாரம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் கே பாண்டியராஜன் தெரிவித்தார்.

9) **C.பொன்னையன்** *மாநில திட்டமிடல் ஆணையத்தின் துணைத் தலைவராக* பதவி ஏற்றார்

10) ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கடலடியிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கமுதியில் புதிய சூரிய பூங்கா திட்டத்தை அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

11) கோவில் நிர்வாகிகள் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்திலிருந்து BHOG சான்றிதழைப் பெறுவதை தமிழக உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம் கட்டாயமாக்கியுள்ளது.

12) தமிழக சுகாதார அமைப்பு சீர்திருத்த திட்டத்தை முதலமைச்சர் 2020 மார்ச்-4 அன்று சென்னையில் தொடங்கினார்.

13) சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அம்ரேஷ் பிரதாப் சாஹி மாவட்ட நீதிபதிகள்(இரண்டு நீதிபதிகள்)அமர்வு பரிந்துரைக்கும் குறிப்புகளை தீர்மானிக்கும் முதல் அனைத்து பெண்கள் நீதிபதிகள் அமர்வினை (மூன்று நீதிபதிகள்) அமைத்துள்ளார்.

**மூன்று நீதிபதிகள்** :

- ✓ புஷ்பா சத்தியநாராயணா
- ✓ அனிதா சுமந்த்
- ✓ பி.டி.ஆஷா

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## *கோவிட் – 19 செய்திகள்*

| | |
|---|---|
| **பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன்** | கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் |
| **ஸ்பெயின் இளவரசி மரியா தெரசா** | Covid-19ஆல் உயிரிழந்து விட்டார். |
| **USA** | சீனா மற்றும் இத்தாலி நாடுகளைத் தொடர்ந்து இங்கு கொரோனாவால் அதிகபேர் பாதிக்கப்பட்டுள்ளனர். |
| **www.covid19-sdmc.org** | Covid-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிராந்தியங்களைப் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக சார்க்(தெற்காசிய நாடுகளின் |


| | |
|---|---|
| | பிராந்தியக் கூட்டமைப்பு) பேரிடர் மேலாண்மை மையம் www.covid19.sdmc.org என்ற வலைதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது |
| **புதிய மையப்பகுதி** | உலக சுகாதார அமைப்பு 2020 மார்ச் 13அன்று ஐரோப்பாவை உலகளாவிய கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கான புதிய மையப்பகுதியாக அறிவித்துள்ளது. |
| **COVID செயல் தளம்** | WEF,WHO மற்றும் WELCOME trust ஆகியோர்கள் இணைந்து உருவாக்கியுள்ளனர். |
| **SARS-Cov-2 அமைப்பு** | புனே தேசிய வைராலஜி ஆராய்ச்சி நிறுவனம் 'SARS – COV - 2 வடிவமைப்பை' வெளியிட்டுள்ளது. |
| **COVID – 19 மருத்துவமனைகள்** | ஒடிசாவில் இந்தியாவின் மிகப்பெரிய COVID-19 மருத்துவமனைகளை திறக்க திட்டமிடப் பட்டுள்ளது. |
| **Kids, Vaayu & Corona: Who wins the fights?** | 9 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே covid-19 பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காக Kids,vaayu & corona:who wins the fights? என்ற விழிப்புணர்வு காமிக் தொடரை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. |
| **செப்ஸிஸ்-கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் இறப்பதற்கான பொதுவான காரணமாகும்.** | இது உயிரை பாதிக்கும் உறுப்புகள் செயலிழப்பு நோயாகும் இந்நோய் தொற்றினால் பாதிக்கப் பட்டவர்களிடையேயுள்ள வைரஸ்களுக்கு எதிராக நம் உடலில் உள்ள எதிர்ப்பு சக்தி அதிகமாக செயல்படுவதால் நச்சுப் பொருட்கள் நமது உடலில் உள்ள திசுக்கள் மற்றும் |

ZERO CURRENT AFFAIRS SHANKAR

| | |
|---|---|
| | உறுப்புகள் செயலிழப்புக்கு காரணமாக அமைகின்றன இதனால் உயிரிழப்பு ஏற்படுகிறது. |
| **ஹைட்ராக்ஸி குளோரோகுயின்- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்** | Covid-19 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க இந்த மருந்து ஒரு அத்தியாவசிய மருந்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **"CoNTec"** | சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் 'CoNTec', Covid-19 தொலைத் தொடர்பு மையத்தை தொடங்கினார். |
| **இந்திய கால்பந்து அணியின் கேப்டன் சுனில் சேத்ரி** | FIFA COVID-19 பிரச்சாரத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார். |
| **Mylab PathoDetect COVID -19 Qualitative PCR kit** | Mylab pathoDetect COVID-19 Qualitative PCR kit என பெயரிடப்பட்ட சோதனை கருவிகளுக்கு வணிகரீதியான ஒப்புதல் பெற்ற முதல் இந்திய நிறுவனம் Mylab ஆகும். இச்சோதனை கருவிகள் FDA/CDSCO மற்றும் ICMR மதிப்பீட்டால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| **Star Novel Coronavirus (nCoV) (COVID-19) காப்பீட்டுத் திட்டம்:** | கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக காப்பீட்டு தொகை வழங்குவதற்கு ஸ்டார் சுகாதார மற்றும் காப்பீட்டு நிறுவனம் Star Novel covid-19 காப்பீட்டுக் கொள்கையை அறிமுகப் படுத்தியுள்ளது. |
| **COVA பஞ்சாப்** | கொரோனா வைரஸ் அதன் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பஞ்சாப் |

| | |
|---|---|
| | மாநில அரசு COVA பஞ்சாப் என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| **நமஸ்தே நடவடிக்கை (Operation Namaste)** | ✓ இந்திய ராணுவ தலைமை தளபதி மனோஜ் முகுந்த் நாரவனே நடவடிக்கை<br>✓ நமஸ்தேவை (Operation Namaste) தொடங்கினார்.<br>✓ இந்த நடவடிக்கையானது COVID-19 ஐ எதிர்த்து ஒன்றினைவதற்காக தொடங்கப்பட்டது. |
| **கொரோனா கவாச்** | கொரோனா கவாச் என்ற கொரோனா வைரஸ் கண்காணிப்பு செயலியை இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. |

## ***கொரோனா வைரஸ்***



இந்தியாவில் கொரோனோ வைரஸால் பாதிக்கப்பட்ட முதல் நபர் ஜனவரி 30, 2020-அன்று **திரிசூர் கேரளாவில்** கண்டறியப்பட்டார்.

கொரோனா வைரஸ் என்ற பெயர் **லத்தீன் வார்த்தையிலிருந்து** எடுக்கப்பட்டது. அதற்கு **"கிரீடம்"** என்று பொருள்படும்.

உலக சுகாதார அமைப்பு **Covid-19-ஐ கொரோனா வைரஸ்** நோய்க்கான அதிகாரப்பூர்வ பெயராக அறிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பு இந்நோயினை **தொற்றுநோயாக** அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸின் **அறிவியல் பெயர் ஆர்தொகொரோனாவிரினே (orthocoronavirinae) அல்லது கொரோனாவிரினே (coronavirinae)**

கொரோனா வைரஸ் **கொரோனவிரிடாவின் குடும்பத்தைச்** சேர்ந்தது.

கொரோனா வைரஸின் **புறவடிவமைப்பில் ஒரு கிளப் வடிவ வைரல் ஸ்பைக் பெப்ளோமர் சிவப்பு நிறத்தில் விரியோனைச் சுற்றியுள்ள ஒரு கொரோனாவின்** தோற்றத்தை உருவாக்குகிறது.

இந்த வைரஸ் உறையானது ஒரு புரியிழை RNA மரபணுத்தொகுதி மற்றும் **சுருள் வடிவ சமச்சீர் நியூக்ளியோகாப்சிட் ஆகியவற்றை கொண்டுள்ளது.**

இது **ஒருபுரியிழை வைரஸாகும்**

வைரஸ் துகள்களின் விட்டம் சுமார் **120nm** ஆகும்.

கொரோனா வைரஸ்களின் மரபணு அளவு சுமார் **27 முதல் 34 கிலோபேஸ்கள்** இருக்கும்.

வைரஸின் உறையானது லிபிட் அடுக்கை கொண்டுள்ளது இதில் சவ்வு மற்றும் ஸ்பைக் கட்டமைப்பு புரதங்கள் ஆகியவை காணப்படுகின்றன.

கொரோனா வைரஸ் **ஹேமக்லுட்டினின் எஸ்டெரேஸ் எனப்படும் குறுகிய ஸ்பை போன்ற** மேற்பரப்பு புரதத்தைக் கொண்டுள்ளது.

**வைரஸ் பரவுதல் :**

- ✓ பாதிக்கப்பட்ட நபர் இருமல் மற்றும் தும்மலிலிருந்து வெளியேறும் உமிழ் நீர் மூலம் பரவுகிறது.
- ✓ பாதிக்கப்பட்ட நபரை தொடுதல் மற்றும் கை கொடுத்தல் மூலம் பரவுகிறது.
- ✓ தொற்று நோயை தடுக்கவும் Covid-19 பரவுவதலை கட்டுப்படுத்தவும் கீழ்க்கண்டவற்றை

ZERO Current Affairs 0% Effort 100% Results
SHANKAR IAS ACADEMY THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004



பின்பற்ற வேண்டும்

- ✓ சோப்பு மற்றும் தண்ணீரில் உங்கள் கைகளை தவறாமல் கழுவ வேண்டும் அல்லது ஆல்கஹால் கலந்த தூய்மையாக்கி மூலம் கைகளை சுத்தம் செய்ய வேண்டும்.
- ✓ இருமும் மற்றும் தும்மும் நபர்களிடமிருந்து குறைந்தது ஒரு மீட்டர் அளவு தூரத்தை பேணிக்காக்க வேண்டும்
- ✓ உங்கள் முகத்தை தொடுவதை தவிர்க்க வேண்டும்
- ✓ இருமல் மற்றும் தும்மல் ஏற்படும் பொழுது வாய் மற்றும் மூக்கை மூடிக் கொள்வது சிறந்ததாகும்
- ✓ உங்கள் உடல்நிலை சரியாக இல்லாமல் இருக்கும்போது வீட்டிலேயே இருப்பது நல்லது
- ✓ புகைப்பிடித்தல் மற்றும் உங்கள் நுரையீரலை பலவீனப்படுத்தும் எந்த ஒரு செயல்களையும் தவிர்த்தல் வேண்டும்.
- ✓ தேவையற்ற பயணத்தை தவிர்ப்பதன் மூலமும் கூட்டம் உள்ள இடங்களிலிலிருந்து விலகி இருப்பதன் மூலமும் இதனை தவிர்க்கலாம்.

**அறிகுறிகள்:**

- ✓ காய்ச்சல்
- ✓ உடல்சோர்வு
- ✓ வறட்டு இருமல்
- ✓ மூச்சுத்திணறல்
- ✓ தலைவலி
- ✓ தொண்டை புண்
- ✓ ஒரு சிலருக்கு மட்டும் வயிற்றுப் போக்கு மற்றும் குமட்டல் ஆகியவை ஏற்படுகின்றன.

| **தொற்று நோயின் 4 நிலைகள்:** | **நிலை 1:** | **நிலை 2:** | **நிலை 3:** | **நிலை 4:** |
|---|---|---|---|---|
| | பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்கு பரவுகிறது | பாதிக்கப்பட்ட நபர்களிலிடமிருந்து உள்நாட்டில் உள்ளவர்களுக்கு பரவுகிறது | சமூகத்தில் பெரும்பகுதியில் இந்நோய் பரவி பாதிப்புக்குள்ளாகிறது. | இந்த நோயானது தெளிவான முற்றுப்புள்ளி இல்லாமல் தொற்றுநோயாக பரவுகிறது. |

SHANKAR IAS CURRENT AFFAIRS

## *தேசம்*

1) **2020 மார்ச் 22** அன்று காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை நாட்டு மக்கள் வெளியில் செல்லாமல் வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு பிரதமர் கேட்டுக்கொண்டார். இது **"மக்களால் மேற்கொள்ளப்படும் ஊரடங்கு" (Janata curfew)** என்று அழைக்கப்பட்டது.

2) **ஆறாவது சர்வதேச யோகா தினமானது** 2020 ஜூன் 21 அன்று **லடாக்கின் தலைநகரமான லே-யில்** நடைபெற்றது.

3) **கர்நாடக மாநிலத்தின்** அனைத்துப் பள்ளிகளிலும் 2020-21 கல்வியாண்டு முதல் **'பியாரி' மொழியானது** மூன்றாவது விருப்பப்பாடமாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

4) **உத்தரகாண்ட் மாநிலத்தின் கோடைகால தலைநகரமாக 'கெய்ர்சான்'** இருக்கும் என அம்மாநிலத்தின் முதலமைச்சர் திரிவேந்திரசிங் ராவத் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

5) மகாராஷ்டிரா மாநிலத்தின் **'வாதவன்' என்னும் பகுதியில் பெரிய முக்கியத் துறைமுகம் அமைக்கப்படும்** என்று மத்திய அமைச்சரவை தெரிவித்துள்ளது.

6) ஜம்மு-காஷ்மீரில் இணையமானது மறுபடியும் செயல்படத் தொடங்கியுள்ளது. இணையத் தொடர்பானது **Mac-binding** என்னும் தொழில்நுட்பம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

7) ஒடிசா மாநிலத்தின் பெஹ்ராம்பூர் நகரத்தில் உள்ள **14 பதின்பருவ சிறுமிகளால் அந்நகரத்தின் குடிசைப் பகுதிகளில் வாழும் இளம் பெண்களை ஊக்குவிக்கும்** விதமாக **'கிஷோரி சக்தி கார்யக்கரம்'** எனும் பிரச்சாரம் ஆனது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

8) **'ஆயுஷ் கிரிட்'** எனும் இணைய தளமானது **ஆயுஷ் அமைச்சகத்தால்** தொடங்கப்பட்டுள்ளது.

9) **இந்தியாவில் உள்ள பெண் தலைவர்கள் மற்றும் புதிய மாற்றத்தை உருவாக்கும் பெண்களுக்கான சிறப்பு அங்கீகாரத்தை அளிப்பதற்காக நிதி ஆயோக்** அமைப்பானது **'Women Transforming India Awards'** என்ற **விருதினை வழங்குகிறது.**

10) **"Women in Science, Technology, Engineering, Mathematics and Medicine (WISTEMM)"** என்ற திட்டமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையினால் தொடங்கப்பட்டுள்ளது.

11) **மிகப்பெரிய குற்றங்களைப் பற்றிய தகவல்களை பல்வேறு காவல்துறை அமைப்புகளிடையே பகிர்ந்து கொள்வதற்காக' Crime Multi Agency Centre (Cri-MAC)'** என்ற முன்னெடுப்பை மத்திய உள்துறை அமைச்சகமானது தொடங்கியுள்ளது.

12) இமாச்சலப் பிரதேசத்தின் காங்க்ரா மாவட்டத்தில் உள்ள 'பாங் டாம் ஏரி வன உயிர் சரணாலயத்தில்' **பருந்துகளுக்கு உணவளிக்கும் இடமானது (vulture restaurant)** அமைக்கப்பட்டுள்ளது.

13) **குறுகிய கால சேவை பணியில் (SSC) கடற்படையில் செயலாற்றும் பெண் அதிகாரிகளுக்கும் ஆண் அதிகாரிகளைப் போலவே நிரந்தர சேவையை (PC)** வழங்க உச்சநீதிமன்றமானது உத்தரவிட்டுள்ளது.

14) **இந்தியாவின் அடுத்த மேகக் கணினி தொழில்நுட்ப மையத்தை** 2021ஆம் ஆண்டில் **டெல்லியில் அமைக்க கூகுள் நிறுவனமானது** முடிவு செய்துள்ளது.

15) **ஹரியானா பட்டியலினத்தவர் (கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு) மசோதா 2020-ஐ** ஹரியானா அமைச்சரவையானது நிறைவேற்றியுள்ளது. இந்த மசோதாவானது அம்மாநிலத்தில் உள்ள பட்டியல் இனத்தவர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வகை செய்கிறது.

16) **கரோனா வைரஸ் பற்றிய ஆராய்ச்சிக்கான** ஒரு மையத்தினை **ஐஐடி குவஹாத்தியானது** உருவாக்கியுள்ளது.

17) **கோவிட்-19** நோயினைக் கட்டுப்படுத்த ஒடிசா மாநில அரசானது **"மோ ஜீபன்"** எனும் திட்டத்தினை தொடங்கியுள்ளது.

18) 1974ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்ட, இந்தியா முழுமைக்குமான **சிறப்பு பார்சல் அனுப்பும் சேவையை இந்திய ரயில்வேயானது** மறுபடியும் அறிமுகப்படுத்தியுள்ளது.

19) கோவிட்-19 நோய்க்கு எதிரான போராட்டத்துக்காக **"மாவட்ட கனிம நிதியத்தை" பயன்படுத்திக் கொள்ள** அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய நிதியமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

20) கோவிட்-19 போன்ற நோய்களால் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்த **"பிரதம அமைச்சரின் குடிமக்கள் அவசரகால நிவாரண மற்றும் உதவி நிதியம்" (PM CARES Fund)** என்ற நிதியத்தை மத்திய அரசானது தொடங்கியுள்ளது.

21) கோவிட்-19 கால ஊரடங்கு சமயத்தில் ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க காந்திநகர் இந்திய தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது (IIT, Gandhinagar) **'ஐசக் திட்டம்'** என்ற ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

22) **ஒரு நபர் கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளாரா** என்பதை கண்டறிய இந்திய அரசானது **'ஆன்டிபாடி சோதனையை'** நடத்தத் திட்டமிட்டுள்ளது.

23) 2020 மார்ச் 26 முதல் **உத்திரப்பிரதேச மாநில அரசானது** பான்மசாலா உற்பத்தி மற்றும் விற்பனையை முழுவதுமாகத் தடை செய்துள்ளது.

24) மத்திய சுகாதார அமைச்சகமானது 2020, மார்ச்25 அன்று தொலை **மருத்துவத்துக்கான வழிகாட்டு கொள்கைகளை (Telemedicine guidelines) வெளியிட்டுள்ளது.**

25) வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்களை சுகாதார அதிகாரிகள் அடையாளம் காண்பதற்காக **அழியாத மையைப் பயன்படுத்துவதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது**.

26) 2020 மார்ச் 26 அன்று நடைபெற இருந்த **மாநிலங்களவைத் தேர்தல்களை** ஒத்திவைக்க **இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது**.

27) குடியுரிமைத் திருத்தச் சட்டம் **(CAA),** தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (NPR), தேசிய குடிமக்கள் பதிவேடு **(NRC)** ஆகியவற்றுக்கு எதிரான தீர்மானத்தை **தெலுங்கானா மாநில சட்ட சபையானது 2020 மார்ச் 16** அன்று இயற்றியுள்ளது.

28) மும்பை மத்திய ரயில் நிலையத்தின் பெயரை **'நானா சங்கர்சேத்'** என்று பெயர் மாற்றம் செய்வதற்கு மகாராஷ்டிர அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

29) திவால் சட்டத் திருத்த மசோதா 2020 **[Insolvency and Bankruptcy Code (Amendment Bill)] மற்றும் கனிமங்கள் சட்டத் திருத்த மசோதா 2020 ஆகியவற்றை மாநிலங்களவையானது** 2020 மார்ச் 12 அன்று நிறைவேற்றியது.

30) 3 லட்சத்திற்கும் அதிகமாக உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு **'தனித்துவ மாற்றுத்திறனாளிக்கான அடையாள எண்' (UDID)** ஒன்றினை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

31) நாட்டிலேயே **சூரிய ஒளி மின் உற்பத்தி மேற்பரப்பு கூரைகளை** நிறுவியுள்ள மாநிலங்களில் முதலாவது இடத்தில் **குஜராத்** உள்ளது.

32) **பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவன (HAL) வளாகத்தில்** இலகுரக ஹெலிகாப்டர்களை தயாரிக்கும் மையத்தினை மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் தொடங்கி வைத்துள்ளார்.

33) **மகாராஷ்டிரா மாநில அரசானது** தனது மாநிலத்தில் உள்ள **ஆட்டோ ஓட்டுனர் களுக்காக**' மகிழ்ச்சி நேரம் **(Happy Hour)** என்பதனை செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

34) **நிறக்குருடு தன்மை உள்ள நபர்களுக்கு தனியாக ஓட்டுனர் உரிமம் வழங்குவதற்கு** மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

35) **நிதி ஆயோக் அளித்துள்ள ஒரு அறிக்கையின்படி, போஷான் அபியான் திட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆந்திரப் பிரதேசம்** உருவெடுத்துள்ளது.

36) **மத்தியப்பிரதேச மாநிலத்தில் உள்ள தேசிய சம்பல் வனவிலங்கு சரணாலயத்தினை**, 2020 மார்ச் 2 அன்று மத்திய அரசானது **'சூழலியல் கூருணர்வு மண்டலமாக'** அறிவித்துள்ளது.

37) இந்திய ரயில்வேயானது தனது முதலாவது ரயில்வே உணவகமான "**Restaurant on wheels**" உணவகத்தினை அசன்சோல் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கும் பொதுமக்களுக்குமான பயன்பாட்டுக்காக திறந்துள்ளது.

38) **இஸ்ரோவின் நேவிக் (NavIC)** தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்த உள்ளதாக **Realme மற்றும் Xiomi** ஆகிய நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## சர்வதேசம்

1. சவூதி அரேபியாவுக்குப் பிறகு **உலகிலேயே அதிகமான இராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா** உருவெடுத்துள்ளது.

2. சீனாவின் யுன்னான் மாகாணத்தில் **2020 மார்ச் 23 அன்று ஹன்டா வைரஸ்** தொற்றினால் பாதிக்கப்பட்ட முதலாவது நபர் கண்டறியப்பட்டார்.

3. 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள கரோனா வைரஸ் நோய்த் தொற்றினை உலகளாவிய நோய்த்தொற்றாக **(Global Pandemic)** உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்துள்ளது.

4. **'பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான்'** அவர்களின் **100வது பிறந்தநாளானது** வங்கதேசத்தில் 2020 மார்ச் 17அன்று அனுசரிக்கப்பட்டது.

5. அனைத்து வயதுக்குட்பட்ட பெண்களுக்கும் இலவச சுகாதார அணையாடைகளை அளிப்பதற்கான **'இலவச மாதவிலக்கு காலப் பொருட்கள் மசோதாவினை (Period products Free provision Bill)'** ஸ்காட்லாந்து பாராளுமன்றமானது **நிறைவேற்றியுள்ளது.**

6. **வங்கதேசம் மற்றும் இந்தியா இடையிலான 4156 கிலோமீட்டர் நீளம் கொண்ட** சர்வதேச எல்லையானது **உலகின் ஐந்தாவது மிக நீண்ட சர்வதேச எல்லை ஆகும்.**

7. **கரோனா வைரஸ் நோய்த்தொற்று (COVID -19) அபாயம் காரணமாக இந்திய அரசானது அனைத்து வெளிநாட்டு நபர்களுக்கும் விசா வழங்குவதை** 2020 மார்ச் 13 முதல் நிறுத்தி வைத்துள்ளது.

8. அனைத்து வகையான பொதுப்போக்குவரத்தினையும் இலவசமாக வழங்கும் உலகின் முதலாவது **நாடாக ஐரோப்பாவின் 'லக்சம்பர்க்'** நாடானது உருவெடுத்துள்ளது.

9. ஐக்கிய நாடுகள் **பாதுகாப்பு குழுவின் தலைமைப் பொறுப்பினை 2020** மார்ச் முதல் **சீனா** வகிக்க உள்ளது.

10. **பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'சுனேரி மசூதியானது'** 1996ஆம் ஆண்டுக்கு பிறகு முதல்முறையாக பெண்களின் வழிபாட்டுக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

## பொருளாதாரம்

1) **இந்தியாவில் உள்ள அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு** இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியின் அளவானது 12.6 சதவீதம் உயர்ந்து 2019-ஆம் ஆண்டில் ஏறக்குறைய இருநூறு மில்லியன் டன்களாக உள்ளது. இந்த வளர்ச்சியானது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக கணக்கிடப்பட்டுள்ளது.

2) **நிதி மசோதா 2020 ஆனது**, 2020 மார்ச் 23 அன்று **எந்தவித கலந்துரையாடலும் இன்றி வெறும் 29 நிமிடங்களில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது**.

3) **நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு** 2020-21ஆனது 2020 மார்ச் 16 அன்று **மக்களவையில்** நிறைவேற்றப்பட்டது.

4) 2020 மார்ச் 4 அன்று மக்களவையானது **"Direct Tax Vivaad se Vishwas"** திட்டத்தினை செயல்படுத்துவதற்கான மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.

5) **கரோனா வைரஸ் தொற்றினால் தேசிய அளவில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சமூக விலகலைக் கடைபிடிக்கும் வகையில் நாடாளுமன்றமானது** 2020 மார்ச் 23 அன்று முதல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

6) **இந்தியாவின் முதலாவது கோவிட்-19 நோய்க்கான சிறப்பு மருத்துவமனையை மும்பையில் அமைக்க உள்ளதாக ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் (RIL)** அறிவித்துள்ளது.

7) ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக, **இந்திய சிறுதொழில் நிறுவனங்கள் வளர்ச்சி வங்கியானது** (SIDBI) 2020 ஜூன் 5 அன்று **"ஸ்வாவலம்பன் எக்ஸ்பிரஸ்"** முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.

8) **இந்தியப் பழங்குடி மக்கள் கூட்டுறவுச் சந்தை வளர்ச்சிக் கூட்டமைப்பானது (TRIFED) 3 லட்சம் பழங்குடி மக்களுக்கு தொழில் முனைவு திறன்களை** வளர்க்க '**Tech for Tribal**' எனும் திட்டத்தினை தொடங்கியுள்ளது.

9) **39ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் மாநாடானது** மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களின் தலைமையில் 2020 மார்ச் 14 அன்று புதுதில்லியில் நடைபெற்றது.

## *விளையாட்டு*

1) **32வது ஒலிம்பிக் போட்டிகள்** அடுத்த ஆண்டிற்கு **(2021)** ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

2) **மாநிலத்தில் உள்ள முன்மாதிரியான விளையாட்டு வீரர்கள் மற்றும் கலைஞர்களுக்கு சலுகைகளை வழங்க மணிப்பூர் அரசு** இரண்டு புதிய திட்டங்களை ***(CMAST & CMAT)*** அறிவித்துள்ளது.

3) **சவுராஷ்டிரா அணி** வங்காள அணிக்கு எதிராக அவர்களை வீழ்த்தி தங்கள் முதல் **ரஞ்சி கோப்பையை** வென்றது.

4) **டைகர் உட்ஸ்** 2021ஆம் ஆண்டில் **உலக கோல்ஃப் வாழ்த்தரங்கில்** (Hall of Fame) சேர்க்கப்படுவார்.

5) **டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற வீரர்களில்** நீரஜ் சோப்புராவிற்கு பிறகு இரண்டாவதாக தகுதி பெற்ற ஈட்டி எறியும் வீரர் **சிவ்பால் சிங்** ஆவார்.

## *மாநாடு மற்றும் கருத்தரங்குகள்*

| மாநாடுகள் / கருத்தரங்குகள் | நோக்கம் / கரு / வெளிப்பாடு | இடம் |
|---|---|---|
| **பிரக்யான் மாநாடு 2020** | இரண்டு நாள் இந்திய இராணுவ சர்வதேச கருத்தரங்கு, தரைவழிப் போர் ஆய்வு மையத்தினால் (CLAWS) ஏற்பாடு செய்யப்பட்டது. | புது தில்லி |
| **G-20 மெய்நிகர் உச்சி மாநாடு** | ✓ கோவிட் 19 தொற்றுநோயை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பற்றி விவாதிக்க இந்தியா உட்பட உலகின் 20 முக்கிய பொருளாதாரங்கள் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்றன.<br>✓ G-20 உச்சிமாநாட்டின் தற்போதைய தலைமை-சவுதி அரேபியா, இதுவே மெய்நிகர் உச்சி மாநாட்டை நடத்துவதற்கான முடிவை எடுத்தது. | |

| | | |
|---|---|---|
| **நானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு** | பொருள், இயந்திரம், உற்பத்தி, மனிதவளம் மற்றும் இயந்திரவியல் என நானோ தொழில்நுட்பத் துறையில் உள்ள 5Mக்களை பற்றி விவாதிக்கப்பட்டது. | கொல்கத்தா |

## *திட்டங்கள் / யோஜனாக்கள்*

| **திட்டங்கள் / யோஜனாக்கள்** | **நோக்கங்கள் / ஏன் செய்தியில்?** | **அமைச்சகம் / அமைச்சரவை / மாநிலம்** |
|---|---|---|
| **இந்திரா காந்தி மத்ரித்வா போஷன் திட்டம்** | ✓ மகப்பேறு பயன் திட்டம்<br>✓ திட்டத்தின் கீழ் இரண்டாவது குழந்தை பிறப்பிற்கு ரூ.6,000 வழங்கப்படும்.<br>✓ **முதல் குழந்தை பிறப்பிற்கு ரூ.5000** வழங்கும் மத்திய அரசின் **பிரதம மந்திரி மத்ரு வந்தனா** திட்டத்தை மாநில திட்டம் பூர்த்தி செய்யும். | ராஜஸ்தான் |
| **சுபோஷித் மா அபியான்** | வளரிளம் பருவ பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பிறந்த பெண் குழந்தைகளை ‘ஆரோக்கியமாக’ வைத்திருப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். | மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா |

## *குறியீடுகள்*

| **குறியீடு** | **நோக்கம் / வெளியீடு** | **இந்தியாவின் தரநிலை** | **முதலிடம்** |
|---|---|---|---|
| **பாலின சமூக நெறிகள் அட்டவணை** | ஐ.நா. வளர்ச்சி திட்டம் (UNDP) | | பாகிஸ்தான் |
| **உலக மகிழ்ச்சி அறிக்கை** | ஐக்கிய நாடுகள் | 144 | பின்லாந்து |

## இராணுவப் பயிற்சி

| இராணுவ பயிற்சியின் பெயர் | பங்குபெறும் நாடுகள் | பயிற்சி வகை | இடம் |
|---|---|---|---|
| **ஆப்பிரிக்கா சிங்கம்** | அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்கா | வருடாந்திர இராணுவ பயிற்சி | மொராக்கோ, செனகல் மற்றும் துனிசியா |

## விழாக்கள்

| எண் | விழா | இடம் |
|---|---|---|
| **1.** | ஆட்டுகல் பொங்கலா | கேரளா |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## பாதுகாப்பு மற்றும் விண்வெளித்துறை

| பாதுகாப்பு மற்றும் விண்வெளித்துறை | நோக்கம் | நாடு / மாநிலம் / அமைப்பு |
|---|---|---|
| **யுவ விஞ்ஞானி காரியக்ராம்** | "ஜெய் விஞ்ஞான், ஜெய் அனுசந்தன்" என்ற அரசாங்கத்தின் தொலைநோக்கு பார்வைக்கு இணங்க, பள்ளி குழந்தைகளுக்கான சிறப்புத் திட்டம் | இஸ்ரோ |
| **இலான் மஸ்க்** | மே மாதத்தில் முதல் முறையாக விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்புவார். | ஸ்பேஸ் X |
| **பெர்சிவெரன்ஸ்** | நாடு தழுவிய போட்டிக்கு பின், நாசா தனது செவ்வாய் ஆய்வு வாகனம் 2020-க்கு பெர்சிவெரன்ஸ் என பெயரிட்டுள்ளது. | நாசா |
| **ரைடர்-X** | புதிய வெடிக்குண்டு கண்டறியும் சாதனத்தை வெளியிட்டது. | டிஆர்டிஓ மற்றும் ஐஐஎஸ்சி, பெங்களூர் |

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

| உயிரினங்கள் / புதிய கண்டுபிடிப்புகள் | வகை / நோக்கம் | இடம் / தயாரிப்பு |
|---|---|---|
| **ஸ்வயம் இணைய வாயில்** | பொறியியல், மனித நேயம் மற்றும் சமூக அறிவியல், சட்டம் மற்றும் மேலாண்மை படிப்புகள் உட்பட அனைத்து பாடங்களும் உள்ளடக்கிய பள்ளி (வகுப்பு 9 முதல் 12 வரை) மற்றும் உயர்கல்வி (இளங்கலை, முதுகலை திட்டம்) இரண்டையும் சேர்த்த ஆன்லைன் கல்வி இணையதளம். | மனித வள மேம்பாட்டு அமைச்சகம் |
| **சமாதான் இணைய வாயில்** | தாமதமான பணவழங்கல் தொடர்பான குறிப்புகளை ஆன்லைனில் பதிவு செய்வதற்கு வசதியாக | குறு, சிறு மற்றும் நடுத்தற நிறுவன அமைச்சகம் |
| **யூரேசியன் ஓட்டர்** | **ஐ.யூ.சி.என் சிவப்பு பட்டியல் :** “நியர் திரிட்டண்ட்” (Near Threatened) | சிலிக்கா ஏரியில் காணப்படுகிறது. |
| **சிவப்பு பாண்டா** | **ஐ.யூ.சி.என் நிலை** : “இடர்நிலை” (Endangered) | சிக்கிமின் மாநில விலங்கு |
| **சஹயாத்ரி மேகா** | புதிய வகை நெல் - குலைநோய்க்கு எதிர்ப்புச் சக்தி உள்ளது மற்றும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்தவை. | வேளாண் மற்றும் தோட்டக்கலை அறிவியல் பல்கலைக்கழகம் (UAHS), சிவமோகா. |
| **Oculudentavis khaungraae** | இது மீசோசோயின் காலத்திலிருந்து (சுமார் 250 மில்லியன் முதல் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வரை) கண்டுபிடிக்கப்பட்ட டைனோசர்களில் மிகச்சிறிய டைனோசர் ஆகும். | |
| **“MyGov கொரோனா உதவி மையம்”** | MyGov கொரோனா உதவி மையம், வாட்ஸ்அப் செயலி மூலம் பரப்பப்படும் அனைத்து தவறான தகவல்கள், போலி செய்திகள் மற்றும் வதந்திகளை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. | மத்திய அரசு |

| | | |
|---|---|---|
| **“சம்மிட்” – மீத்திறன் கணிப்பொறி** | உலகின் அதிவேக மீத்திறன் கணிப்பொறி மற்றும் ஐபிஎம்மின் மிகப்பெரிய இயந்திரமுமான “சம்மிட்” - கொரோனா வைரஸ் ஒரு உடம்பைத் தொற்றவிடாமல் தடுக்கக்கூடிய 77 வகையான தனித்துவமான இரசாயனங்களை அடையாளம் கண்டன. | |
| **எம்ஏசிஎஸ் 4028** | அதிக புரதச்சத்துடைய கோதுமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. | அகர்கர் ஆராய்ச்சி நிறுவனம் |
| **பூமி ராசி இணையவாயில்** | நிலம் கையகப்படுத்தும் இணையவாயில் | சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் |
| **நிஹா செயலி (NIGHA)** | வரவிருக்கும் உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களில் பண பட்டுவாடா மற்றும் சாராய பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ‘சுத்தமான மற்றும் ஆரோக்கியமான’ தேர்தல் நடப்பதை உறுதி செய்வதற்கு | ஆந்திர பிரதேசம் |

## குழுக்கள்

| | |
|---|---|
| **NK சிங் குழு** | மத்திய மற்றும் மாநிலங்களுக்கான நிதி ஒருங்கிணைப்புக்கான வழிமுறைகளை உருவாக்கும் பொருட்டு நிதி ஆணையம் NK சிங்கின் தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது. |

## நியமனங்கள் மற்றும் செய்திகளில் வந்த நபர்கள்

| நபர்கள் | பொறுப்பு / பதவி |
|---|---|
| **நீதிபதி ரஞ்சன் கோகோய்** | மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். |
| **பிமல் ஜூல்கா** | தலைமை தகவல் ஆணையர் |

| | |
|---|---|
| **அஜய் பூஷண் பி பாண்டே** | நிதித்துறை செயலாளர் |

| வ.எண் | தற்போதைய மாநிலங்களவை உறுப்பினர்கள் | துறை |
|---|---|---|
| 1. | ரஞ்சன் கோகோய் | சட்டம் |
| 2. | சுப்பிரமணிய சுவாமி | பொருளாதாரம் |
| 3. | மேரி கோம் | விளையாட்டு |
| 4. | ரூபா கங்குலி | கலை |
| 5. | நரேந்திர ஜாதவ் | பொருளாதாரம் |
| 6. | சுரேஷ் கோபி | கலை |
| 7. | ராம் சகல் | சமூகப் பணி |
| 8. | ஸ்வப்பன் தாஸ்குப்தா | பத்திரிக்கை |
| 9. | சம்பாஜி ராஜே | சமூகப் பணி |
| 10. | சோனல் மான்சிங் | கலை |
| 11. | ரகுநாத் மோகபத்ரா | கலை |
| 12. | ராகேஷ் சின்ஹா | இலக்கியம் |

| முதலமைச்சர் | மாநிலம் |
|---|---|
| **சிவராஜ் சிங் சவுகான்** | மத்தியப் பிரதேசம் |

## செய்திகளில் வந்த பெண்கள்

| | |
|---|---|
| **பி.வி.சிந்து** | இந்த ஆண்டின் பிபிசி இந்திய விளையாட்டு வீராங்கனை |

| | |
|---|---|
| பி.டி.உஷா | வாழ்நாள் சாதனையாளர் விருது |
| **முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் சுதந்திர போராட்ட வீரர் அம்ரித் கவுர்** | டைம் இதழின் ஆண்டின் 100 சிறந்த பெண்கள் பட்டியல் |
| **லெப் ஜெனரல் மாதுரி கனித்கர்** | ஒருங்கிணைந்த பாதுகாப்பு ஊழியர்களின் புதிய துணைத்தலைவர் (மருத்துவம்) |

## *விருதுகள்*

| | |
|---|---|
| **ஆபெல் பரிசு 2020** | **ஹில்லெல் ஃபர்ஸ்டன்பெர்க் மற்றும் கிரிகோரி மார்குலிஸ்**<br>**பங்களிப்பு :** "குழு கோட்பாடு, எண் கோட்பாடு மற்றும் ஒருங்கிணைப்புகளில் நிகழ்தகவு மற்றும் இயக்கவியலில் இருந்து முறைகளைப் பயன்படுத்தி முன்னோடியாக திகழ்ந்ததற்காக" |

## *முக்கிய தினங்கள்*

| நாள் | நிகழ்வுகள் | கருத்துரு / முக்கியத்துவம் |
|---|---|---|
| **மார்ச் 1** | பூஜ்ய பாகுபாடு நாள் | **THEME:** "Zero Discrimination against Women and Girls" |
| | உலக செவி நாள் | **THEME:** "Hearing for life, don't let hearing loss limit you" |
| | உலக வனவிலங்கு நாள் | **THEME:** "Sustaining all life on Earth" |
| **மார்ச் 4** | ராஷ்டீரிய சுரக்ஷா திவாஸ் / தேசிய பாதுகாப்பு தினம் | பாதுகாப்புப் பணியாளர்கள், காவல்துறையினர், பாரா இராணுவப் படைகள், காவலர்கள், கமாண்டோக்கள், ராணுவ அதிகாரிகள் போன்ற அனைவரையும் உள்ளடக்கிய இந்தியப் பாதுகாப்புப் படைகளின் பணிகளை கவுரவிப்பதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| **மார்ச் 8** | சர்வதேச பெண்கள் தினம் | **THEME:** "Generation Equality: Realizing Women's Rights" |
| **மார்ச் 14** | பை (Pi) தினம் | இந்த யோசனை அமெரிக்காவில் தோன்றியது. அங்கு மார்ச் 14ஐ 3/14 என வெளிப்படுத்தும் வடிவத்தில் தேதிகளை எழுதுவது பின்பற்றப்பட்டு வந்தது. பையின் (pi) மதிப்பு 3.14 ஆகும். |
| **மார்ச் 15** | உலக நுகர்வோர் உரிமைகள் தினம் | **THEME:** "The Sustainable Consumer" |
| | உலக சிட்டுக்குருவி தினம் | இந்த நாளைக் கடைப்பிடிப்பது - இந்த பறவையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அதை பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| | சர்வதேச மகிழ்ச்சி தினம் | **THEME:** "Happiness for all, together" |
| **மார்ச் 21** | சர்வதேச காடுகள் தினம் | **THEME:** "Forests and Biodiversity" |
| **மார்ச் 22** | உலக தண்ணீர் தினம் | உலக தண்ணீர் தினத்தின் முக்கிய நோக்கம் வளங்குன்றா வளர்ச்சி இலக்கு 6 – ஐ அடைவது, அவை 2030-குள் அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதாரத்தை அடைவதை உள்ளடக்கியது ஆகும். |
| | உலக வானிலையியல் தினம் | **THEME:** "Climate and water" |
| | ஷாஹித் திவாஸ் / தியாகிகள் தினம் | பகத்சிங், ராஜ்குரு மற்றும் சுக்குதேவ் - இந்தியாவின் சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவில் கொள்வதற்கான நாள். |
| **மார்ச் 24** | உலக காசநோய் தினம் | **THEME:** "It's Time: END TB" |
| **மார்ச் 28** | எர்த் ஹவர் | ஒவ்வொரு ஆண்டும் மார்ச் கடைசி சனிக்கிழமையன்று எர்த் ஹவர் நடைபெறும். |